# சிதம்பரக்கும்மி.

## திருப்போரூர் டி. கோபால் நாயகர் அவர்கள் இயற்றியது

# citamparak kummi

## by tiruppOrUr kOpala nAyakar

In tamil script, unicode/utf-8 format

**Acknowledgements:**

Our Sincere thanks go to Tamil Virtual Academy for providing a scanned PDF of this work.

This e-text has been prepared using Google OCR online tool and subsequent proof-reading of the output file. We thank Mrs. Meenakshi Balaganesh, Bangalore, India for her assistance in proof-reading this work.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

**© Project Madurai, 1998-2021.**

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

## சிதம்பரக்கும்மி.

## திருப்போரூர் டி. கோபால் நாயகர் அவர்களாற்றமது

### Source:

சிதம்பரக்கும்மி.
திருப்போரூர் டி. கோபால் நாயகர் அவர்களாற்றமது
மதராஸ், என். சி. கோள்டன் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது. 1914.
மதராஸ் என். சி. 17-18 காளத்தியப்ப முதலிவீதி.

---

(சென்னை குயப்பேட்டை வித்தியாரத்நாகர அச்சுக்கூடப் பதிப்பு (1920), ரத்னமுதலியார் செய்த பதிப்பு (1884) இவைகளை ஒப்புநோக்கி பாடபேதங்கள் திருத்தப்பட்டன).

-------------

## சிதம்பரக்கும்மி.

கடவுள் துணை.
திருச்சிற்றம்பலம்.

கற்பகவிநாயகர் - துதி.

சீர்மேவுந் தில்லையம் பலத்தில் - முன்பு
சேரக் கும்மித் தமிழ்பாடக்
கார்மேவு மேலைக் கோபுர வாசல்
கற்பக பிள்ளையார் காப்பாமே. (1)

முக்குறுணி விநாயகர்- துதி.
சர்க்கரை மோதகந் தேங்காயுங் கொண்டு
சந்நிதி முன்பாகத்தான் படைத்து
முக்குறுணிப் பிள்ளை யாரை வேண்டி
முழங்கிக் கும்மி யடியுங்கடி. (2)

சுப்பிரமணியர் - துதி.
கோல மயிலின் முதுகேறி வந்து
கும்ப முனிக்கு வருட்செய்யும்

பாலசுப்பி ரமணியன் பீஜாட் சரத்தைப்
பாடிக் கும்மி யடியுங்கடி. (3)

கங்கா தேவிக்குக் கைகூப்பி - யாருங்
கையிலெடுத் துள்ளே பானம்பண்ணி
தங்கா மற்சிவ காமி சந்நிதி
சார்ந்து கும்மி யடியுங்கடி. (4)

கருதுஞ் சுருதிக் கெட்டாத - சிவ
காம சௌந்தரி வாசலிலே
விருது பேசியே சிறுகுழந் தைகள்
வேதம் படிக்குது பாருங்கடி. (5)

நாலுபு ரத்திலுங் கோபுரமா - மதிற்
நடுவி லெங்கணு மாளிகையாம்
காலோ ராயிரங் கொண்டொரு மண்டபம்
கட்டியி ருக்குது பாருங்கடி. (6)

தூயமறை முதலா ராய்ந்து - இங்கே
துலங்கிய மூவா யிரவர்
ஞாயம் பொருந்திய தேவசபை வந்து
நாடிக் கும்மி யடியுங்கடி. (7)

சாந்து பொட்டு தளதளென்ன - நல்ல
சந்தன வாடை குமுகுமென்ன
கூந்த லழகிக ளெல்லாங் காலைக்
குவித்துக் கும்மி யடியுங்கடி. (8)

அஸ்த கடகம் பளபளென்ன - சொல்லும்
அரை நூன்மாலை தளதளென்ன
விஸ்தார மாகநின்று கொண்டு கையை
வீசிக் கும்மி யடியுங்கடி. (9)

கைதனில் விபூதிபையுங் கொண்டு - அவர்
கண்டத்தில் ருத்திராட்ச மாலைபூண்டு
வைதீக பூசை செய்கின்ற தீட்சதர்
வாழக் கும்மி யடியுங்கடி. (10)

கோவிலுக்கு நாலுபேர் களுண்டாம் - அவர்
குறித்த முறையாய்ப் பூசைசெய்ய
பாவித்த பின்பவர் வேறொருவர் வசப்
படுத்துவா ரென்றே கும்மியடி (11)

ஆண்டுக்குள் ளாறபிஷேக முண்டாம் - பின்னும்
அதிலே ரெண்டு திருநாளாம்
வேண்டி வந்தார் கலி தீருமென்று
விரைந்து கும்மி யடியுங்கடி (12)

பூமி புகழ்ந்திடுந் தில்லைப்பதி - அது
பூலோகக் கயிலாச மென்று
தாமரைப் பூவினில் வாழ்கின்ற லட்சுமி
தாயார் சந்நதி பாருங்கடி. (13)

மூலத் தானத்தைக் கண்டாயே - நல்ல
முத்தியிது வென்று கொண்டாயே
காலெடுத் தாடிய நிர்த்த சபேசரைக்
கண்டு தெரிசிப்போம் வாருங்கடி. (14)

தில்லைமா காளியோ டாடிவர - அவள்
சித்தங் கலங்கித்தலை குனிந்தாள்
வெல்லுவ தெப்படி யென்றொரு காலை
விண்ணி லெடுத்தார் பாருங்கடி. (15)

நெற்றியில் வேர்வை முத்துதிர்ந்து - மெத்த
நேர்த்திய தாய்ப்பரந் தோடிவர
பத்தியுடன் பொன் னம்பல வாணனைப்
பணிந்துக் கும்மி யடியுங்கடி. (16)

தித்தியென் றீசனடனம் புரிய - மெய்த்
தேவர்கள் பூமழை தான்சொரிய
மத்தளங் கொட்டியே கோபால கிருஷ்ணனை
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. (17)

சிதம்பர மென்று சொல்லாமல் - விச்
சித்திர கூடமென்று சொல்லி
நிதங்கொண் டாடுமையங் கார்கள் வந்து
நின்றிருக் கின்றார்கள் பாருங்கடி. (18)

காணிக்கை கொண்டு வாருங்கடி - இந்தக்
கனக சபையைப் பாருங்கடி
மாணிக்க வாசகர் புகுந்த வாசலை
மதித்துக் கும்மி யடியுங்கடி. (19)

அன்ன முடன்பால் தேங்கனியும் - செய்யும்
அபிஷேக முண்டென் னாளும்
பொன்னம் பலந்தனில் சந்திர மௌளியைப்
போற்றிக் கும்மி யடியுங்கடி (20)

முத்தி யளித்திடுஞ் சந்நிதிக்குச் - சொல்லும்
மேளமுந் தாளமு மேதுக்கடி
சத்தம் பெருகிய கண்டாம ணியோசை
சந்நிதிக் கேர்வையாம் பாருங்கடி. (21)

புட்டு வடையுந் தேன்குழ லும்மணப்
புத்துருக் குநெய் சம்பாவும்
சட்டப் படிதவ றாம லையன்
சந்நிதிக் கேர்வையாம் பாருங்கடி. (22)

சுற்றிவந் துச்சியைப் பாருங்கடி - நல்ல
சோதிமயக் கம்ப மொன்பதடி
தத்துவங் கள்தொண் ணூற் றாறுங்கூடிச்

சமைந்த சபையைப் பாருங்கடி. (23)

பாவிகள் கண்ணுக்குச் செப்பேடு - உற்றுப்
பார்த்தாற் பத்தரை மாற்றுத்தங்கம்
கோவை பாடிய மாணிக்க வாசகர்
கோவில ழகைப் பாருங்கடி. (24)

அஞ்செழுத் தாலே மதிலுண் டாம்பர
மானந்தக் கும்பமுமங் குண்டாம்
அஞ்செழுத் துப்படிக் கப்பாலே பிரம்
மானந்தத் தாண்டவம் பாருங்கடி. (25)

கோடியுகந் தவஞ் செய்தாலு - மிந்தக்
கோவிலைப் பார்க்க முடியாது
ஆடிய பாதத்தைக் கண்டாருக் கிணை
யாரென்று சொல்லுவோம் பாருங்கடி. (26)

நெற்றியிலே திருநீ றணிந்து - என்றும்
நிஷ்கள மாகிய சிற்சபையில்
தித்திக்க வேசிவ நாமத்தைப் பூசிக்குந்
தீட்சதர் கூட்டத்தைப் பாருங்கடி. (27)

வெட்டவெ ளியிற்றிரை திறந்து - யார்க்கும்
வேதியர் தீபமுங் காட்டிவர
சட்டமுள்ள சிவ சிதம்பர மென்று
சாய்ந்து கும்மி யடியுங்கடி (28)

தில்லை வெளியைக் கண்டேண்டி யெந்தன்
தேகம் பரவசங் கொண்டேண்டி
அல்ல லறவாசல் நின்றேண்டி மிக்க
ஆனந்தத் தாண்டவம் பாருங்கடி. (29)

ஆகாச லிங்கத்தைக் கண்டேண்டி - இங்கே

ஆரும றியாமல் நின்றேண்டி
ஏகாந்த மாகவிருந் தேண்டி மன
தேக்கந் துலைந்தது பாருங்கடி. (30)

சித்தஞ் சிதம்பர மாச்சுதடி - முன்னே
செய்த வினையெல்லாம் போச்சுதடி
சுத்தப் பிரம்மமய மாச்சுதடி யதைச்
சொல்லத் தெரியுமோ பாருங்கடி. (31)

சாதிபே தங்களற் றேனடி - இந்தச்
சாஸ்திர மனைத்தையும் விட்டேண்டி
போதம யக்கந்தொ லைந்தேண் டியன்பு
பொருந்தக் கும்மி யடியுங்கடி. (32)

நாடுந்தைப் பூரண பூசத்திலே - தில்லை
நாயக னற்குரு வாரத்திலே
ஆடிய நாடகம் பாம்புபு லிதனக்
காமென்று கும்மி யடியுங்கடி. (33)

சஞ்சித கர்மத்தை விட்டேண்டி - பவ
சாகரத் தையொழித் திட்டேண்டி
குஞ்சித பாதத்தை தொட்டேண் டிமனங்
கூர்ந்து கும்மி யடியுங்கடி. (34)

சொல்லும் பொருளையு மற்றாயோ - முன்
துன்பம னைத்துமொ ழித்தாயோ
அல்லும் பகலையு மற்றாயோ தில்லை
யானந்தத் தாண்டவம் பாருங்கடி. (35)

விதியெ ழுத்தைக்கி ழித்தாச்சு - முன்
விட்டகுறை வந்து தொட்டாச்சு
மிதியமிர் தமுண் டாச்சு தென்று
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. (36)

கோவிலுக் குள்ளேய னேகமுண்டு - அந்தக்
குறிப்பறிந் ததைச் சொல்லுவீரேல்
தேவரக சியம் பள்ளியறை வந்து
தெளிந்து கும்மி யடியுங்கடி. (37)

சண்டேஸ் வரர்தமைப் பாருங்கடி - அந்தக்
சந்நிதிக் கேகை கொட்டுங்கடி
மண்டலம் புகழு மழகர் வாசலில்
வாழிபாடு வோம் வாருங்கடி. (38)

வீட்டுக் கவலைகள் விட்டொழி யார்மெத்த
வீம்புகள் பேசியே வீணலைப்பார்
பாட்டைப் படித்தாலும் சிதம்பரம் வந்து
பலன தல்லவோ பாருங்கடி. (39)

புத்திர பாக்கிய மெத்தவுண்டாம் - பசும்
பொன்னுமணிப் பூஷணமு முண்டாம்
பத்தியுடன் கோபால கிருஷ்ணன் தினம்
பணியக் கும்மிய டியுங்கடி. (40)

**சிதம்பரக்கும்மி - முற்றிற்று.**

-----------